**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : ரோஷ்னா காசிம்**

**தேதி : 17.05.2026 – ஞாயிற்றுக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி**

---------------------------------------------------------------------------------------------

*தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி 2 நாள் அரசுமுறை பயணமாக இன்று ஸ்வீடன் நாட்டின், Gothenburg நகருக்குச் செல்கிறார்.

செயற்கை நுண்ணறிவு மற்றும் தொழில்நுட்பத்திறன் ஆகியவை எதிர்கால பொருளாதாரத்தின் முக்கியத் தூண்கள் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

சிபிஎஸ்இ-ல் மும்மொழி பாடத்திட்டத்தை வரும் ஜூன் மாதம் முதல் கட்டாயம் நடைமுறைப் படுத்த வேண்டும் என்று மத்திய பள்ளிக் கல்வி வாரியம் தெரிவித்துள்ளது.

புதுச்சேரியில், மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள் இன்று முதல் தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

*மோடி -1 (05)*
*மோடி – 2 வாய்ஸ் (15)*

**(வாய்ஸ்)**

பிரதமர் திரு. நரேந்திர மோடி தமது 5 நாடுகளின் சுற்றுப்பயணத்தின் இரண்டாம் கட்டமாக நேற்று நெதர்லாந்து சென்றடைந்தார். இந்தியாவும், நெதர்லாந்தும் பாதுகாப்பு, கனிமங்கள் உள்ளிட்ட முக்கிய துறைகளில் 17 ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டன. பிரதமர் திரு. நரேந்திர மோடி மற்றும் Dutch பிரதமர் திரு. ராப் ஜெட்டன் இடையேயான பேச்சுவார்த்தையின் போது இரு தலைவர்களும் மேற்காசிய நிலைமை குறித்தும், குறிப்பாக உலகளாவிய எரிசக்தி விநியோகம் மற்றும் வர்த்தக கட்டமைப்புகளுக்கு ஏற்பட்ட இடையூறுகள் குறித்தும் கலந்து ஆலோசித்தனர். ரஷ்யாவுடன் நடந்து வரும் மோதல் மற்றும் பிராந்திய பாதுகாப்பு முன்னேற்றங்கள் மற்றும் உக்ரைன் நிலைமை குறித்தும் இரு தலைவர்களும் பேச்சு வார்த்தை நடத்தினர். இந்த பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து இந்தியாவும், நெதர்லாந்தும் வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு, செமி கண்டக்டர்கள், விண்வெளி, செயற்கை நுண்ணறிவு மற்றும் குவாண்டம் கம்ப்யூட்டிங் மற்றும் வளர்ந்து வரும் தொழில் நுட்பங்களை மேம்படுத்துவதற்கான கூட்டாண்மை திட்டத்தை வெளியிட்டன.

*மோடி -3 (08)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று ஸ்வீடன் பிரதமர் திரு. Ulf Kristersson-ஐ சந்தித்து வர்த்தகம், தூய்மை, எரிசக்தி, செயற்கை நுண்ணறிவு, புத்தாக்க தொழில்கள், விண்வெளி, வளர்ந்து வரும் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகள் குறித்து ஆலோசிக்க உள்ளார். மேலும் அந்நாட்டு தொழிலதிபர்களுடன் நடைபெறும் வட்டமேசை மாநாட்டில் பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஸ்வீடன் பிரதமர் திரு. Ulf Kristersson, ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் திருமதி. Ursula von der Leyen ஆகியோர் பங்கேற்கின்றனர்.

*அமித் ஷா (14)*

செயற்கை நுண்ணறிவு மற்றும் ஆழ்ந்த தொழில்நுட்பத்திறன் ஆகியவை எதிர்கால பொருளாதாரத்தின் முக்கியத் தூண்கள் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார். குஜராத் மாநிலம், அகமதாபாத்தில் இன்று **மில்லியன் மைண்ட்ஸ் டெக் பார்க்—முதற்கட்டம்** மற்றும் கிரேமி சிட்டி வளாகம் ஆகியவற்றை திறந்து வைத்துப் பேசிய அவர் உலகின் வளர்ந்து வரும் ஒவ்வொரு துறையிலும் இந்தியா ஒரு முன்னணி நாடாக உருவெடுத்துள்ளது என்ற கூறினார். குஜராத் மாநிலத்திற்கு இரண்டு நாள் பயணம் மேற்கொண்டுள்ள அவர், இன்று காந்தி நகரிலுள்ள தேசிய வடிவமைப்பு நிறுவனத்தின் புத்தாக்கம் மற்றும் அடைகாப்பு மையத்தையும் திறந்து வைத்தார். மேலும், காந்தி நகர் மாநகராட்சியின் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை தொடக்கி வைத்து அடிக்கல் நாட்டிய அவர், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்தின் மதுர் பால் பண்ணையில் புதிதாக கட்டப்பட்ட 5 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஆலையையும் திறந்து வைத்தார்.

*ஹார்மூஸ் (12)*

ஹார்மூஸ் நீரிணைப் பகுதியில் வர்த்தக கப்பல்கள் மீது நடத்தப்படும் தாக்குதலுக்கு ஐ.நா.வின் நிரந்தர இந்திய பிரதிநிதி திரு. பர்வத நேனி ஹரீஷ் கண்டனம் தெரிவித்துள்ளார். ஐ.நா. பொருளாதாரம் மற்றும் சமூக கவுன்சிலின் சிறப்புக் கூட்டத்தில் உரையாற்றிய திரு. ஹரீஷ் இந்த தாக்குதலை எற்க முடியாது என்றும், பொது மக்களையும், கப்பல் பயணிகள் மீதும், மாலுமிகள் மீதும் தாக்குதல் நடத்தப்படுவதை எந்தவகையிலும் நியாயப்படுத்த முடியாது என்றும் கூறியுள்ளார். கடல் சார்

பயணத்திற்கு எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்த யாருக்கும் உரிமையில்லை என்று ஓமன் கடற்பகுதியில் இந்திய வர்த்தக கப்பல் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சில தினங்களில் திரு. ஹரீஷ் இந்த கருத்தை தெரிவித்துள்ளார். இந்த கப்பலில் இருந்த 14 மாலுமிகளையும், ஓமன் அரசு அதிகாரிகள் பத்திரமாக மீட்டனர்.

*நீட் (16)*

நீட் தேர்வு வினாத்தாள் கசிவு வழக்கில், புனேவைச் சேர்ந்த மற்றொரு முக்கிய குற்றவாளியான தாவரவியல் பேராசிரியர் மனிஷா மந்தாரே-வை சிபிஐ கைது செய்துள்ளது. முன்னதாக, குற்றம் சாட்டப்பட்ட வேதியியல் பேராசிரியர் பி.வி. குல்கர்னி, மனிஷா வாக்மரே ஆகியோரை சிபிஐ டெல்லி நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தியதை அடுத்து, நீதிமன்றம் இவர்களை 10 நாள் சிபிஐ காவலில் வைத்து விசாரிக்க உத்தரவிட்டுள்ளது. இவ்வழக்கு விசாரணையின் ஒரு பகுதியாக நாடு முழுவதும் உள்ள 6 வெவ்வேறு இடங்களில் சிபிஐ அதிகாரிகள் சோதனைகளை மேற்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கிடையே, நாடு முழுவதும் நீட் மறு நுழைவுத் தேர்வு அடுத்த மாதம் 21ஆம் தேதி நடைபெறவுள்ள நிலையில் மாணவர்கள் தேர்வு மையங்களை மாற்றிக்கொள்ள தேசிய தேர்வு முகமை அனுமதித்துள்ளது. வரும் 21ஆம் தேதிக்குள் இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம் என்று தேர்வு முகமை அறிவித்துள்ளது. இதனிடையே, நீட் முறைகேடுகளைத் தடுக்கும் வகையில் தேசிய தேர்வு முகமையில் தலா இரண்டு இணை செயலர்கள் மற்றும் இயக்குநர்களை நியமித்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

*உயர் ரத்த அழுத்த தினம் (05)*

உலக உயர் ரத்த அழுத்த தினம் இன்று உலகம் முழுவதும் கடைபிடிக்கப்படுகிறது. **உயர் ரத்த அழுத்தத்தை ஒன்றாக கட்டுப்படுத்துவோம். உங்கள் ரத்த அழுத்தத்தை வழக்கமாக பரிசோதித்து அமைதியான கொலையாளியை வெல்லுங்கள்** என்பது இவ்வாண்டின் கருப்பொருளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

*உலக தொலை தொடர்பு தினம் (05)*

உலக தொலை தொடர்பு தினம் இன்று கொண்டாடப்படுகிறது. 1985ஆம் ஆண்டு பாரீசில் சர்வதேச தொலை தொடர்பு சங்கம் தொடங்கப்பட்ட நாள் ஒவ்வொரு ஆண்டும் உலக தொலை தொடர்பு தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இது குறித்த கூடுதல் விபரம்... **(வாய்ஸ்)**

*உலக தொலை தொடர்பு தினம் 2 வாய்ஸ் (12)*

**(வாய்ஸ்)**

உலக தொலை தொடர்பு தினமான இன்று, தகவல் தொடர்பு கட்டமைப்பை பயன்படுத்தி சமுதாய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இத் தினம் கொண்டாடப்படுகிறது. பல்வேறு தரப்பு மக்களையும், நாடுகளையும், மின்னணு கட்டமைப்பில் இணைக்கும் நாளாகவும் இது திகழ்கிறது. அரசு நிர்வாகம், தொழில் நிறுவனங்கள், பொதுமக்கள் என அனைத்து தரப்பு மக்களுக்கும் **தொலை தொடர்பு தகவல் தொழில்நுட்பம்** ஒரு பாலமாக விளங்குகிறது. இதனையொட்டி நாடு முழுவதும் டிஜிட்டல் கட்டமைப்பை வலுப்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்தும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு மத்திய அரசு ஏற்பாடு செய்துள்ளது. **டிஜிட்டல் இணைப்பு உலகளாவிய தொடர்பை**

வலுப்படுத்துகிறது என்பதே இந்த ஆண்டின் உலக தொலை தொடர்பு தின கருப்பொருளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

*கேரளம் (09)*

கேரள முதலமைச்சராக காங்கிரஸின் திரு. சதீசன் நாளை பதவியேற்கவுள்ளார். திருவனந்தபுரத்தில் நடைபெறவுள்ள நிகழ்ச்சியில் ஆளுநர் திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேக்கர் அவருக்கு பதவிப்பிரமாணம் செய்து வைக்கவுள்ளார். இந்நிகழ்ச்சியில் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர். 140 தொகுதிகளைக் கொண்ட கேரள மாநிலத்தில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி 102 இடங்களில் வெற்றி பெற்று அங்கு ஆட்சி அமைக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

*சிபிஎஸ்இ (13)*

சிபிஎஸ்இ-ல் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை மும்மொழி பாடத்திட்டத்தை வரும் ஜுன் மாதம் முதல் கட்டாயம் நடைமுறைப் படுத்த வேண்டும் என்று மத்திய பள்ளிக் கல்வி வாரியம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக வாரியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் 3 மொழிகளில் 2 மொழிகள் இந்திய மொழிகளாக இருக்க வேண்டும் என்றும், தேசிய கல்விக் கொள்கையின் அடிப்படையில் இந்த நடைமுறை கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. 10ஆம் வகுப்பில் 3ஆவதாக தெரிவு செய்யப்படும் மொழிக்கு சிபிஎஸ்இ தேர்வுகள் இருக்காது என்றும், பள்ளிகளில் அளிக்கப்படும் இன்டர்னல் மதிப்பெண் அடிப்படையிலேயே மதிப்பீடு செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தேர்வு எழுதுவதற்கு 3ஆவது மொழியில்

பெற்றுள்ள மதிப்பெண் அடிப்படையில் அனுமதி மறுக்கப்படாது என்றும் மத்திய கல்வி வாரியம் தெளிவுபடுத்தியுள்ளது.

*மன் கி பாத் - (08)*

பிரதமர் திரு நரேந்திர மோடியின் 134 ஆவது மன்-கீ-பாத் எனும் மனதின் குரல் நிகழ்ச்சி வரும் 31 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷன் தொலைக்காட்சியின் அனைத்து அலைவரிசைகளிலும் ஒலிபரப்பாக உள்ளது. இந்நிகழ்ச்சியில் இடம் பெற வேண்டிய கருத்துக்களை, பொதுமக்கள் நமோ செயலி, மை-கவ் இணையதளம் மற்றும் 1800 11 7800 என்ற கட்டணமில்லா தொலைபேசி வாயிலாக வரும் 29ஆம் தேதி வரை தெரிவிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

*புதுச்சேரி கணக்கெடுப்பு (12)*

புதுச்சேரியில், மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள் இன்று முதல் தொடங்கும் என்றும், இந்த கணக்கெடுப்பு கிராம அளவில் விரிவான விவரங்களை வழங்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. நாட்டின் திட்டமிடல் கொள்கை, வடிவமைப்பு நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற தொகுதி வரையறை போன்ற மிக முக்கியமான செயல்பாடுகளுக்கு இந்த விவரங்கள் அடிப்படையாக அமைகின்றன. இந்த கணக்கெடுப்பின் போது வீட்டு அமைப்பு, குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, சமையல் எரிபொருள், மின்சாரம், தொலைபேசி, இணைய வசதி, வாகனங்கள் மற்றும் இதர வசதிகள் உள்ளிட்ட முக்கிய விவரங்கள் சேகரிக்கப்படவுள்ளன. இந்த கணக்கெடுப்பு பணிக்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும், இந்தப் பணியில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*காரைக்கால் கணக்கெடுப்பு (17)*

புதுச்சேரி மாநிலம், காரைக்கால் மாவட்டத்தில் 2027ஆம் ஆண்டிற்கான மக்கள் தொகை கணக்கெடுப்பின் முதற்கட்ட பணிகளில் ஒரு பகுதியாக இணைய வழி மூலம் குடும்ப விவரங்களை பதிவு செய்யும் மக்கள் தொகை சுய கணக்கெடுப்பு நடவடிக்கை இன்று தொடங்கி வரும் 31ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு காரைக்கால் மாவட்ட ஆட்சியர் திருமதி இஷிதா ராட்டி இந்நிகழ்ச்சியை தொடக்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. பிஆர்என் திருமுருகன், தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.நாஜிம், திருநள்ளாறு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.ராஜசேகரன் உள்ளிட்ட பலர் தங்களுடைய குடும்ப விவரங்களை இணையதளம் மூலம் பதிவு செய்தனர். இந்நிகழ்ச்சியில் பேசிய அம்மாவட்ட ஆட்சியர் திருமதி இஷிதா ராட்டி மக்கள் தொகை சுய கணக்கெடுப்பு சென்சஸ் போர்ட்டலான sc.census.gov.in என்ற இணையதளத்தின் மூலம் பதிவு செய்யலாம் என்றும், இந்த போர்ட்டலைப் பயன்படுத்தி மொபைல் எண்ணை பதிவு செய்து OTP அங்கீகாரத்தின் மூலம் உள்ளீடு செய்யலாம் என்றும் தெரிவித்தார். இதன் மூலம் கணக்கெடுப்பாளர்களின் பணி மிகவும் எளிதாகிறது என்றும் அவர் கூறினார்.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி 2 நாள் அரசுமுறை பயணமாக இன்று ஸ்வீடன் நாட்டின், Gothenburg நகருக்குச் செல்கிறார்.

செயற்கை நுண்ணறிவு மற்றும் தொழில்நுட்பத்திறன் ஆகியவை எதிர்கால பொருளாதாரத்தின் முக்கியத் தூண்கள் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

சிபிஎஸ்இ-ல் மும்மொழி பாடத்திட்டத்தை வரும் ஜூன் மாதம் முதல் கட்டாயம் நடைமுறைப் படுத்த வேண்டும் என்று மத்திய பள்ளிக் கல்வி வாரியம் தெரிவித்துள்ளது.

புதுச்சேரியில், மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள் இன்று முதல் தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RM/CN/VM**